# DEPOSITION OF WITNESS

## CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE

## IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI

O.S. No.09 /2025

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சுரேஷ்குமார் | Father's/Husband's Name : | கருப்பத்தேவர் |
| Village | : | CITY | : Bangalore |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.07.2026

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) எனது வழக்குரையில் தாவா சொத்து எனது தந்தைக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்று சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி எனது தந்தை தாவா சொத்துக்களை பொறுத்து 1, 2 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்துள்ள தான பத்திரம் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரிதான். எனது தந்தைக்கு நானும், 1, 2 பிரதிவாதிகள் மற்றும் விமலா ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் நான் எனது தந்தையின் முதல் மனைவியின் மகன். 1ம் பிரதிவாதி எனது தந்தையின் 3வது மனைவி. 2ம் பிரதிவாதி மற்றும் விமலா அவரது மக்கள். தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றால் அதில் கருப்பத்தேவரின் வாரிசுகளான அனைவருக்கும் சம பங்கு இருக்கிறது என்றால் சமபங்கு இல்லை. எனக்கு பாதி பங்கும் அவர்களுக்கு பாதி பங்கும் செல்ல வேண்டும். பூர்வீக சொத்தில் அனைவருக்கும் சம பங்கு இருக்கிறது என்றாலும் நான் சொல்லும் பாக விகிதாச்சாரம் தவறானது என்றாலும் சரியல்ல. கருப்பத்தேவரின் வாரிசுகளில் ஒருவரான விமலாவை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தந்தை எழுதிக்கொடுத்த ஆவணத்தில் என்னுடைய கையொப்பம் இல்லை என்று தான் எனது தந்தை எழுதிக் கொடுத்த ஆவணங்கள் செல்லாது என்று பரிகாரம் கோரி இருக்கிறேன் என்றால் சரிதான். சர்வே எண்.690/1A-ல் எனது தந்தை ராஜேந்திர காந்தி என்பவருக்கு 52 செண்ட் நிலத்தை கிரையம் கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில், 1ம் பிரதிவாதி மற்றும் விமலா கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.686 1 ஏக்கர் 48 செண்ட் நிலம் எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 1 ஏக்கர் 48 செணட் நிலத்தை பொறுத்து கடந்த 02.12.2021ம் தேதி 74 செண்ட் நிலத்தை எனக்கும், 74 செண்ட்

நிலத்தை 2ம் பிரதிவாதிக்கும் பிரித்து எனது தந்தை தானமாக எழுதிக்கொடுத்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி எனது தந்தை 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தான பத்திரம் செல்லாது என்று கோரி தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதேபோல், 1வது லக்க சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு எனது தந்தை கடந்த 14.09.2015ம் தேதி தான பத்திரம் எழுதிக்கொடுத்து விட்டார் என்றால் சரிதான். அந்த ஆவணமும் செல்லாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தையிடம் கிரையம் வாங்கிய ராஜேந்திர காந்தியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்களைப் பொறுத்து எனது தந்தையும் அவரது சகோதரர் மாயியும் கடந்த 1985ம் ஆண்டு பாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாக விஸ்தியின்போது தாவா சொத்துக்கள் எனது தந்தைக்கு பாகமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாக விஸ்தியின்படி கிடைத்த சொத்துக்கள் என் தந்தையின் தனிப்பட்ட சொத்துகளாக கருதப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு எனது தந்தை பெயரில் வருவாய் ஆவணங்கள் தாக்கலாகி இருக்கிறது என்றால் சரிதான்.

2) தாவா சொத்துக்கள் எனது தந்தைக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதால் அந்த சொத்துக்களை அவர் இஷ்டம் போல் யாருக்கு வேண்டுமானாலும் எழுதிக்கொடுக்கலாம் என்றால் சரியல்ல. எனது தந்தை அவருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது சுய விருப்பத்தின் பெயரில் 1, 2 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்துள்ளதால் அது சம்மந்தமாக கேள்வி எழுப்ப எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா 1வது லக்க சொத்தை எனது தந்தை எனக்கு எழுதிக்கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார் என்று எனது வழக்குரையில் சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். அதற்கு ஆதரவாக எழுத்து பூர்வமான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு தான பத்திரத்தின் அடிப்படையில் கிடைத்த சொத்துக்களை வத்தலக்குண்டு ஐசிஐசிஐ வங்கியில் அடமான வைத்து கடன் பெற்று இருக்கிறார்கள் என்றால் சரிதான். மேற்படி கடன் தொகைக்கு 1, 2 பிரதிவாதிகள் தான் வட்டி செலுத்தி வந்தார்கள் என்றால் நானும் பணம் கொடுத்து இருக்கிறேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி கடன் தொகைக்கான வட்டிக்கு நானும் பணம் கொடுத்தேன்

என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். 1வது லக்க சொத்தை வேல்முருகன் என்பவருக்கு கிரைய கொடுக்க 1ம் பிரதிவாதியிடம் கேட்டேன் என்றாலும் அதற்கு 1ம் பிரதிவாதி மறுப்பு தெரிவித்துள்ளதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரையம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார் அதன் பிறகு மறுத்துவிட்டார். 2021ம் ஆண்டு எனக்கு தானமாக கிடைத்த 74 செண்ட் நிலத்தைப் பொறுத்து 2ம் பிரதிவாதியிடம் கிரையத்திற்கு பேசி ரூ.3,00,000/-ம் அவரிடம் இருந்து முன்பணமாக பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. அவரிடம் இருந்து நான் எந்த தொகையும் வாங்கவில்லை.

3) நான் 2ம் பிரதிவாதியிடம் கிரையம் பேசியதன் அடிப்படையில் ரூ.3,00,000/-த்தை பெங்களூரில் உள்ள எனது நண்பரின் வங்கி கணக்கிற்கு 2ம் பிரதிவாதி அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து அவர் எழுதிக் கொடுத்துள்ள ஆவணங்கள் செல்லாது என்று விளம்புகை கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. அதே போல் தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களாக எடுத்துக்கொண்டால், ராஜேந்திர காந்தி மற்றும் விமலாவை இந்த வழக்கில் சேர்க்காத தோஷத்திற்காக இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றாலும் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் சம்மந்தமாக பரிகாரம் கோரி இருக்கிறேன். 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த வழக்கு மூலமும் இல்லாததால், அவர்களுக்கு ஆதரவாக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 27.07.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.07.27 14:47:58 +0530

District Munsif,
Aundipatti.